Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை (17-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 21

# விமானங்களை இழந்ததில் மட்டும் அரசுக்கு ரூபா 800 கோடி நஷ்டம்!

## இவ்வாறு செலவிட்டு யுத்தத்தை நடத்த முடியாது என்கிறார் சந்திரிகா

கொழும்பு, டிசம்பர் 17

யுத்தத்துக்காக அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகிறது.

கொலன்னாவ எண்ணெய்க்குதம் தாக்கப்பட்டதால் 250 கோடி ரூபாவும், எட்டு விமானங்களை இழந்ததால் 800 கோடி ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இப்படிச் செலவழித்துக் கொண்டு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த முடியாது.

அரசியல் தீர்வின் மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

சிலாபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார்.

பிரஸ்தாப கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது.

அந்தக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி பின்வருமாறும் கூறினார்:-

இனப் பிரச்சினையை யுத்தத்தினால் தீர்த்து வைக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



நூறு தரம் கைதானாலும் பிராயச்சித்தம் போதாது எண்டு கலைஞர் நினைக்கிறாரோ என்னவோ......!

## தாழமுக்கம் தமிழகத்தைக் கடந்தது

சென்னை, டிச. 17

தென் மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த தாழமுக்கம் நேற்று இரவு தமிழகத்தைக் கடந்தது.

[இ-10]

## தீவுப் பகுதியில் ஊரடங்கு தளர்வு!

காரைநகர், டிச. 17

தீவுப் பகுதியில் உள்ள மக்கள் அதிகாலை வேளையில் திருவெம்பாவைப் பூசைகளுக்குச் செல்ல வசதியாக ஊரடங்கு ஒரு மணித்தியாலத்துக்குத் தளர்த்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.உ. பாஸ்கரனின் ஏற்பாட்டில் காரைநகர் ஈ.பி.டி.பி. அமைப்பாளர் லோகன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தம் மூலமா? சமாதானம் மூலமா?

### அரசு அறிவிக்க வேண்டும் என்கிறார் ரணில்

கொழும்பு, டிச. 17

இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் யுத்தத்தின் மூலம் காண விரும்புகிறதா? அல்லது சமாதான வழியில் சென்று காண முனைகிறதா? என்பது குறித்து தெளிவாக இல்லை. அரசாங்கம் திட்டவட்டமான முறையில் இதனை அறிவிக்க வேண்டும்.

ஐ.தே.க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

களுத்துறை நகரசபை மண்டபத்தில் நடந்த ஐ.தே.கவின் 42 ஆவது தேசிய மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அபிவிருத்திப் பணிகள் முடங்கிக் கிடக்கின்றன. வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டே போகிறது. மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். இதனை ஐ.தே.க. சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஐ.தே.க. கூட்டங்களைக் குண்டர்களை ஏவி விட்டுக் குழப்பியோ, ஐ.தே.க. ஆதரவாளர்களைக் கொலை செய்தோ கட்சியின் எழுச்சியை எவரும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

ஆட்சியாளர்களின் இந்த சவால்களுக்கு எல்லாம் முகம் கொடுக்க நாம் தயாராகவிருக்கின்றோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

## ஜெயலலிதா மீண்டும் கைது!

சென்னை, டிச. 17

வண்ணத் தொலைக்காட்சி ஊழல் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா, வருமானத்துக்குப் பொருந்தாத அளவுக்கு மிக அதிகமாகச் சொத்துக்களைச் சேர்த்துள்ளதாகக் கூறப்படும் வழக்கில் கண்காணிப்பு மற்றும் ஊழல் ஒழிப்புத் துறை அதிகாரிகளால் நேற்று மீண்டும் கைது செய்யப்பட்டார்.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர். சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்திருந்த தனிப்பட்ட முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் ஊழல் ஒழிப்புத்துறை, ஜெயலலிதாவின் சென்னை மற்றும் ஹைதராபாத்தில் உள்ள வீடுகளைச் சோதனையிட்டு 50 கோடி ரூபாவுக்கு மேல் சொத்து இருப்பதைக் கண்டு பிடித்துள்ளது தெரிந்ததே.

[இ-10]

## அரச ஊழியர் ஓய்வுபெறும் சலுகை: நிறுத்தும் முடிவு மறுபரிசீலனை?

கொழும்பு, டிச. 17

அரசாங்க ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறும் வசதியை நிறுத்தும் அரசாங்கத்தின் முடிவு மீளாய்வு செய்யப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள் காட்டி நேற்றைய ''த ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்க ஊழியரின் இந்த வசதியை நேற்றுடன் ரத்துச் செய்யும் வகையில் அரசாங்கம் விடுத்த சுற்றறிக்கையை மீளாய்வு செய்யவேண்டும் என்று தேசிய மீட்பு முன்னணி, ஐ. தே. க., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை கோரியதையடுத்தே சுற்றறிக்கையை மீளாய்வு செய்ய அரசு முன்வந்துள்ளது.

சுற்றறிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐ.தே.க. எம்.பியான கருணசேன கொடித்துவக்கும் குரல் கொடுத்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்றக் கட்டடத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் செயலர் ரவூவ் ஹக்கீம், தேசிய மீட்பு முன்னணி எம்.பி நிகால் கலபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

''அரச ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு, ஏற்கனவே இருந்த நடைமுறையையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்'' என்று ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார்.

''நிலைமையைத் தீர ஆராய்ந்து பதில் அளிப்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குஜ்ரால் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கை வரவிருந்த குஜ்ராலின் விஜயம் ஏன் ரத்தானது? அவரின் விஜயம் ரத்தானதற்கு ஏதாவது பின்னணி உண்டா? என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'குஜ்ராலின் விஜயம் ரத்தானமைக்குப் பின்னணி ஒன்றுமில்லை. சுகவீனம் காரணமாகவே அவர் வரவில்லை' என்று கதிர்காமர் பதில் அளித்தார்.

(இ-3-150)

### உயர் நீதிமன்ற நீதியரசர்

## ஷிராணிக்கு எதிரான 4 மனுக்களும் நிராகரிப்பு

கொழும்பு, டிச. 17

பேராசிரியர் ஷிராணி பண்டாரநாயக்காவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமித்ததை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட 4 மனுக்களையும் உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்து விட்டது.

சட்டத்தரணிகள் குமார் பொன்னம்பலம், ஈ. எஸ். டி சில்வா, சி. சுவர்ணாதிபதி, ஒபயசிறீ கீர்த்திரத்ன ஆகியோர் இந்த மனுக்களைத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம் தபால் திணைக்கள
பிராந்திய நிர்வாக அலுவலக
பதவிநிலை உதவியாளராகச் சேவையாற்றிய
16-12-96 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திரு. வல்லிபுரம் சிவலிங்கம்**

அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதோடு, ஓய்வுகால வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் திகழ இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக உத்தியோகத்தர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(44163)

# யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
## ஆண்டு 6
## அனுமதிப் பரீட்சை - 1997

மேற்படி பரீட்சை **23-12-96** திங்கட்கிழமை காலை இலங்கை நேரம் **10-30** மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நேர அட்டவணை

**10.30 - 11.45 கணிதம்**
**12.00 - 1.00 தமிழ்**

பரீட்சார்த்திகள் அன்று காலை 9-00 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்கவும்.

(9707) **- அதிபர்**

# கண்ணீர் அஞ்சலி

எங்கள் கலாசாலை ஆசிரிய மாணவி
**செல்வி டெய்சி யேசுதாசன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் கியூபேட் யேசுதாசன்

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து கவலையடைகின்றோம். அவரின் பிரிவால் துன்புற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுடன் நாமும் பங்கேற்று அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்,
ஆசிரிய மாணவர்கள், ஊழியர்கள்.

ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய். (44165)

# 31-ம் நாள் நீங்கா நினைவஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை முருகேசு

[O. A, முன்னாள் தச்சை விநாயகராலய மணியகாரர்]

| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 28 — 01 — 1922 | 16 — 11 — 1996 |

தொண்டேதான் வாழ்வென்ற ஐயா
கண்டீர்கள் இறையடியில் என்றால்
தாங்கும் துயரா இது
அமைக சாந்தி என வேண்டுகிறோம்!

17 - 12 - 96 இல் நடைபெறுகின்ற அந்தியேட்டி நிகழ்வுகளில் (காலை 8.00 மணி) கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
குடும்பத்தினர்.

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி வடக்கு. [44170]

## "சித்திரக்கலை"

**9, 10, O/L**
மாணவர்களுக்கானது
- விளக்கப்படங்களுடன் -
ஆக்கம்:
**A.S. சற்குணராஜா**
[யா/ ஹாட்லிக் கல்லூரி]
கிடைக்குமிடம்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(44169)

## புதிய பெரெடெனியா

**கொக்குவில்.**
வணிகப்புள்ளி விவரவியல்
**97/98**
வினா - விடை மீட்டல்
பரீட்சை,மேலதிக வினாவிடை
ஆரம்பம்: **18-12-96**
மதியம்: **12** மணி
ஆசிரியர்:
க.இராஜேந்திரகுமார் B.Sc.
(44157)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நவரட்ணம்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா நவரட்ணம் காலமானார்.

இவர் கனகலிங்கத்தின் [கனடா] அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார் [இத்தாலி], விஜயகுமார் [இத்தாலி], சோபனா [இத்தாலி], காலஞ்சென்ற சுசீலா மற்றும் சாந்தகுமார், உதயகுமார் [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமளா [இத்தாலி], சச்சிதானந்தம் [இத்தாலி] ஆகியோரின் மாமனாரும், சந்தோஷின் [இத்தாலி] அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16-12-96 திங்கட்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.ஸ்ரீநிவாஸன்
[பெறாமகன்]
முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [44173]

## செல்லன் சோதிராசா

(இளைப்பாறிய இரசாயன சாலை உதவியாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

காங்கேசன்துறை பெற்றோல் நிலையத்தடியை பிறப்பிடமாகவும், தற்போது கம்பர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சோதிராசா 08 - 12 - 1996 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சூரியகாந்தியின் அன்புக் கணவரும், ராஜசூரியனின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09 - 12 - 1996 திங்கட்கிழமையன்று வல்வெட்டித்துறையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சோ. சூரியகாந்தி
(மனைவி)
சோ. ராஜசூரியன்
(மகன்)
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(9080)

# MAXAAL HOUSE
## மக்சல் கவுஸ்

சகல கைக்கடிகாரங்களுக்கும் தேவையான ஒறிஜினல் UARTA பற்றறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. [ஜப்பான், ஜேர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை] எம்மிடம் கையளிக்கப்பட்ட வர்ணப்படச் சுருள்கள் 01 - 12 - 96 இல் NINEHEARTS 25-11-96, 01-12-96 இல் PHOTOCROME பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்.

20, ஜுபிலி பஜார்
யாழ்ப்பாணம்.
[9082] [சீமாட்டிக்கு அருகில்]

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் அருந்தவராசா கிருஸ்ணா

(பிரிவு அத்தியட்சகர்,
சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படை, வலி. வடக்கு)

காலத்தின் தேவை உணர்ந்து என்னுடன் இணைந்து பதின்மூன்று வருட கால தொடர் சேவையாற்றிய எமது அங்கத்தவரின் மறைவையொட்டி எனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பிரிவால் துயருறும் இவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நா. குணபாலசிங்கம்,
பிரதேச அத்தியட்சகர்,
சென். ஜோன்ஸ் அன்புலன்ஸ் படை,
வலி. வடக்கு.

(44174)

# அந்தியேட்டியும் நன்றி நவிலலும்

| 10-ம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் மாத நினைவஞ்சலி |
| --- | --- |



**வேலணை மேற்கு**
## திருநாவுக்கரசு - பொன்னு

| | | |
| --- | --- | --- |
| தோற்றம்: | 01—11—1906 | 02—01—1919 |
| மறைவு: | 28—11—1986 | 20—11—1996 |

கடந்த 20-11-96 இல் சிவபதமடைந்த எமது அருமை அன்னை திருமதி பொன்னு - திருநாவுக்கரசு அவர்களின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், ஏனைய வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

அத்துடன் இன்று 17-12-96 இல் அந்தியேட்டிக் கிரியைகள் வேலணை வெள்ளைக் கடற்கரையிலும், 19-12-96 (வியாழக்கிழமை) அன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்து கொண்டு எம்முடன் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

78, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (44167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ...நூலகம்.

ஆப்கானிஸ்தானில்

# மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியா கவலை

புதுடில்லி, டிச. 17

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தலிபான் இயக்கத்தினர் மக்களுக்கு — குறிப்பாக பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் — மனித உரிமைகளை மறுப்பது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

ஐ. நா. சபையில் பேசிய இந்தியாவின் சிறப்புப் பிரதிபிரகாஷ்ஷா ஜனநாயகம் என்ற முறையில் மனித உரிமைகள் தான் முதலில் மதிக்கப்பட வேண்டும் என்றார்.

ஆப்கானில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து இந்தியா வேதனையடைவதாகவும் அவர் கூறினார்.

வன் செயல்களும், ஆயுத சண்டைகளும் ஓய்ந்து காபூலில் இராணுவம் இல்லாத நிலைமை உருவானால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் நடமுறைகளை மேற்கொள்வதற்கு உகந்ததாக இருக்கும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## புறூண்டியில் ஒரு மாதத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி

நியூயோர்க், டிச. 17

ஆபிரிக்க நாடான புறூண்டியில் ஒரு மாத கால இடைவெளிக்குள் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்றும்—

அவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்கள் எனவும்—மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஹூட்டு — ருட்சி இனங்களுக்கும் இடையே இடம் பெற்ற கலவரங்கள் காரணமாக இக்கொலைகள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் இடம் பெற்ற கொலைகளில் அதிகமானவற்றுக்கு இராணுவமே பொறுப்பு என ஐ. நா. தெரிவித்துள்ளது. (இ-10)

## மிகப் பெரிய விமான உற்பத்தி நிறுவனம்

லண்டன், டிச. 17

உலகில் மிகப்பெரிய விமானங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களான ''போயிங்'' நிறுவனமும் ''மக்சோனலட் டக்ளஸ்'' நிறுவனமும் விரைவில் இணையவுள்ளன.

அவை இணைந்து உலகில் மிகப்பெரிய விமான உற்பத்தி நிறுவனமாகவுள்ளன.

இந்த நிறுவனத்தின் மொத்த மதிப்பீடு ஆயிரத்து 330 கோடி டொலர்கள் ஆகும். இந்த நிறுவனம் ''போயிங்'' என்ற பெயரில் இயங்கவுள்ளது. (இ-10)

## இறால் பண்ணைகளை அழிக்குமாறு உத்தரவு

இந்தியாவில் சுமார் 6 ஆயிரம் கிலோ மீற்றர் கரையோரப்பகுதிகளில் சுமார் 1 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சர்வதேச நிறுவனங்களும் இந்திய நிறுவனங்களும் அமைத்துள்ள ஆயிரக்கணக்கான இறால் பண்ணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குள் அழிக்க வேண்டுமென இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 10 கோடி மீனவர்களின் நலனை கருத்திற் கொண்டு உயர் நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கிணங்க அனைத்து இறால் பண்ணைகளையும் அழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## உலக அரங்கில்

### கொபி அனான் தெரிவு உறுதியானது

ஐ.நா.வின் புதிய செயலாளராக கொபி அனான் தேர்வு உறுதியாகவிட்டது. கடந்த வெள்ளிக்கிழமை ஐ. நா. பாதுகாப்புக்குழு இவரைத் தெரிவு செய்த பின் எந்த நாடும் இதுவரை வெளிப்படையாக இவருக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

கொபி அனான் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை ஐ. நா. பொதுச் செயலாளராகப் பணியாற்றுவார்.

58 வயதான கொபி அனான் கடந்த 30 வருடங்களாக ஐ.நா. சபையின் அதிகாரிகளில் ஒருவராகப்பணியாற்றி வந்துள்ளார். (இ-10)

## பாகிஸ்தான் தேர்தலில் இம்ரான்கான் மும்முரம்

இஸ்லாமாபாத், டிச. 17

பாகிஸ்தானின் கிரிக்கெட் வீரராக இருந்து அரசியல்வாதியாக மாறியிருக்கும் இம்ரான்கான் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் எனத் தாம் விரும்புவதாக நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

ஊழலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அதுவும் மரணதண்டனைதான் பொருத்தமானது என்று அவர் கராச்சியில் தமது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

புதியகட்சி அமைத்து தேர்தலில் ஈடுபடுவதில் இம்ரான்கான் தீவிரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-3)

### கப்பல் விபத்தில் 6 பேர் பலி

அமெரிக்காவில் மிசு சிப்பி நதியில் சென்று கொண்டிருந்த ஒரு கப்பல் கட்டுப்பாட்டை இழந்து நியூ ஓர்லன்ஸ் தடைகள் அடங்கிய பகுதியில் மோதியதில்குறைந்தது 6பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தின் போது பெரும் இடி முழக்கம் போல் சத்தம் எழுந்ததாக அவ்விடத்தில் இருந்தோர் தெரிவித்தனர். (உ-3)

## பங்களாதேஷ் சுதந்திர தினம்

டாக்கா, டிச, 17

பங்களாதேஷ் நேற்று தனது 25 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியது. இன்றைய பிரதமர் ஷேய்க் ஹசீனாவின் தந்தையான முஜிபுர் ரஹ்மான் தலைமையில் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் திகதி பாகிஸ்தானிலிருந்து பிரிந்து தனி நாடாக பங்களாதேஷ் உதயமானது.

பங்களாதேஷில் நடைபெற்ற சுதந்திரப் போரில் இந்தியப்படைகள் முஜிபுர் ரஹ்மானுக்கு ஆதரவாக போரில் இறங்கிய போது யுத்த நிலைமை மாறியது.

16-12-1971அன்று பாகிஸ்தான் படைகள் இந்திய, வங்க தேசப்படைகளிடம் சரணடைந்தன.

சுதந்திரதினத்தை முன்னிட்டு கொலை, கொள்ளை, கற்பழிப்புக் குற்றங்களுக்காக சிறையில் உள்ள கைதிகளைத் தவிர்ந்த ஏனைய நூற்றுக்கணக்கான கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

### கால் தடுமாறி விழுந்த கிளின்ரன்

வாஷிங்டன், டிச. 17

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் கடந்த ஞாயிறன்று போட்டோமா நதிக்கரையில் மெதுவாக ஓடி உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தபோது கால்தடுமாறிக் கீழே விழுந்தார்.

இதனால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், விழுந்தவர் எழுந்து சிறிது நேரம் நடந்த பின்னர் மீண்டும் ஓடத்தொடங்கினார் எனவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (இ-10)

### காஷ்மீரில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

காஷ்மீர் மாநிலத்தின் குப்புவாரா பகுதியில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுடைய நவீன ஆயுதங்கள் இந்திய இராணுவத்தினால் கண்டெடுக்கப்பட்டன. ஏ.கே. 47 துப்பாக்கிகள் ஷெல்கள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

### மறுப்பு

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் சின்பின் அரசியல் பிரிவுத்தலைவர் ஜெரி அடம்ஸ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாக வெளியான செய்தியை பிரிட்டிஷ் பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்தன. (இ-3)

# வெள்ளப் பெருக்கினால் மேலும் சீரழியும் குடாநாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை

குடாநாட்டு மக்களின் துன்பவாழ்வில் மழை—வெள்ளம் மேலும் பல சுமைகளைப் போட்டுச் சோதித்துள்ளது. அவர்களது நாளாந்த வாழ்க்கை மேலும் சீர்குலைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

★ குடியிருப்பு வீடுகளில் மழை வெள்ள நீர்.

★ விவசாயப் பயிர்கள் அழுகி நாசம்.

★ சதுப்பு நிலங்களில் நாளாந்த வாழ்வை நடத்தும் நிர்ப்பந்தம்.

★ பொதுச் சுகாதாரச் சீர்கேடு.

★ தொற்றுநோய்கள் பரவும் அபாயம்.

★ நுளம்புத் தொல்லை.

இவை குடாநாட்டு மக்களின் வாழ்க்கையை மேலும் சீரழிக்கும் காரணிகள்.

குடாநாட்டில் மாரிமழை ஆண்டு தோறும் மக்களால் எதிர்பார்க்கப்படுவது விவசாயத்திற்கும் நிலக் கீழ் நீர் வளத்திற்கும் மழை உதவி வந்தது. மாரியை அடுத்து மக்கள் வாழ்வும் வளம் பெற்று வந்தது.

ஆனால் இந்த வருடம் மாரி மழை மக்கள் வாழ்வை சீர்குலைத்து சிதைவடையச் செய்துள்ளது. மக்களின் சம கால வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

பல்வேறு இழப்புக்களுக்கு மத்தியில் மீண்டும் எழுவோம் என வாழத்தலைப்பட்டகுடாநாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டது பெரு மழை.

ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உதட்டிலும் மழை — வெள்ளம் பற்றிய பேச்சே இப்போது.

வருடந்தோறும் மழை பெய்தபோதிலும், இந்த வருட மழையின் தாக்கம் — வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு குறிப்பாகச் சில காரணிகள் இருக்கவே செய்கின்றன.

குடாநாட்டின் தரைத்தோற்ற அமைப்பு, வடிகால் அமைப்புகள், கடந்த வருடங்களில் எவ்வாறு வெள்ளம் பாய்ந்தோடுவதற்கு உதவியனவோ, அதற்கு மாறாக இந்த வருடம் இல்லாமல் போய்விட்டன. வெள்ளம் தேங்கி நிற்பதற்கு ஏதுவாக உள்ளன.

அந்தக் குறிப்பான காரணிகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

★ பகுதிக்குப் பகுதி பாதுகாப்பு அரண்கள் — தடைகள்.

★ வெள்ள வாய்க்கால்கள் உரிய முறையில் பேணப்படாமை.

★ வீதி, மதகுகள் உடைக்கப்பட்டும் மூடப்பட்டும் உள்ளமை.

★ வெள்ள வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளமை.

இவை வெள்ளப் பெருக்குக்கு மேலும் துணை செய்துள்ளன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

### ஞான ஆதவன்

இவ்வருடத்தின் வெள்ளப் பெருக்கால் மக்களுக்கு பல இழப்புகள் ஏற்பட்டு அவர்களின் நாளாந்த வாழ்வு பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

**குடியிருப்பு வீடுகளில் வெள்ளம்**

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது சேத மடைந்த வீடுகளில் கூரைகள், ஓடுகள் சீர்படுத்த முடியாமல் வாழ்ந்து வந்த குடும்பங்களின் உடைமைகளை வெள்ளம் பெருமளவில் சேதமடையச் செய்துள்ளது-

பாதுகாப்புக் காரணங்களுக்காக சொந்த இடங்களிற்குச் செல்ல முடியாமல் இருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், அகதிமுகாம்களிலும் சிறிய குடிசைகளிலும் நலனோன்பு நிலையங்களிலும் தற்காலிக கொட்டில்களில் தங்கியிருந்தனர்.

மண் தரைகளைக் கொண்ட இந்தக் குடிசைகள் சதுப்பு நிலங்களாக மாறியிருப்பதால் சாதாரண உணவைக்கூட சமைத்து சாப்பிட முடியாமலும் வீடுகளில் தங்கியிருக்க முடியாமலும் மக்கள் சில இடங்களில், வீதிகளில் நிற்பதையும் காணக் கூடியதாக உள்ளது.

இடைவெளி இல்லாமல் தொடர்ந்து பெய்த மழையினால் உண்டான வெள்ளம் பாய்ந்தோட முடியாமல் பெருமளவில் தேங்கிநிற்பதால் தரை உயர வேறுபாடு இன்றி பெரும்பாலான பகுதிகளில் நீர் தேங்கி அவை பரந்த கடல் போல் காணப்படுகின்றன.

பல இடங்களில் போக்குவரத்துக்கே கட்டுமரங்கள், வெற்றுப் பீப்பாக்களை இணைத்து உருவாக்கிய மிதவைகள், சிறுபடகுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

பெருமளவு நிலப்பரப்பு சதுப்பு நிலமாக காணப்படுகின்றது. குடிசை வீடுகள் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன.

**விவசாயப் பயிர்கள்**

நில நீர் மட்டம் மேலுயர்ந்து காணப்படுவதாலும், வெள்ளம் தேங்கி நிற்பதாலும் தொடர் மப்புமந்தாரமான கால நிலையாலும் விவசாயப் பயிர்கள் பெருமளவில் அழுகி சேதமடைந்துள்ளன.

புகையிலை, வெங்காயம், கோவா, கரட், லீக்ஸ், பூசனி கீரைவகை, கத்தரி, மிளகாய் மற்றும் சிறுதானியப் பயிர்கள். வெற்றிலை, கிழங்குவகைகள் என்பன வெள்ளத்தால் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

விவசாயப் பயிர்களின் அறுவடைகளைப் பெறவேண்டிய காலத்தில் பயிர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர் (இறைச்சிக் கோழி) சுத்தம் செய்து உடன் பெற்றுக் கொள்ளலாம். V. K. M. பாம், கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி யாழ்பாணம். (44159)

றங்கூன் தேக்குப்பலகை பதினொன்று. சுத்தமாக ஒரு அங்குல கனம், ஒருஅடி அகலம், 12 அடி நீளம். மற்றும் ஒரு முதிரை அலுமாரி விற்பனைக்குண்டு. தொடர்பு: தியாகராசா 72, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (மணிக்கூடு திருத்துமிடம்). (9078)

### Spoken English

சுலபமான முறையில் ஆங்கிலம் எழுத வாசிக்க கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி மே/பா இல: 426, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி). (44160)

### தவறிவிட்டது

விஸ்வலிங்கம் சிவபாலன் ஆகிய எனது 722600770 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கைதடிச் சந்திக்கும், யாழ். நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். ஆரியபவான் தேநீர்ச்சாலை, கைதடி. சன்மானம் வழங்கப்படும். (44155)

ஓங்கார சோதி பராங்கதன் ஆகிய எனது 0902006624 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை சங்கிலியன் வீதிக்கும், சட்டநாதர் கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 37, முதலியார் ஒழுங்கை, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். (44156)

### ஆண்டு 3-5

புலமைப்பரிசில் உட்பட கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். பல வருட அனுபவமுள்ள ஆசிரியை; இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (44119)

### வாடகைக்கு

சகல வசதிகளுடனும் நல்ல தண்ணீருடனும் கூடிய வீடு யாழ். பிரபல பாடசாலைகள் கச்சேரி, நல்லூர் ஆகியவற்றுக்கு அண்மையிலும், யாழ். கல்வித்திணைக்களம் வலயம் 01 இற்கு சமீபமாகவும் உண்டு. நேரில் தொடர்பு கொள்க. திருமதி க. ஸ்ரீகாந்தா, 23, குறொசட் ஒழுங்கை, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (44142)


## புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி

**A/L 97, 98**

வணிகப் புள்ளிவிவரவியல்

கடந்த பரீட்சை, மேலதிக வினா விடை வகுப்புகள்

ஆரம்பம்: **18—12—96** (புதன்) காலை 9 மணி

ஆசிரியர்

திரு. இராஜேந்திரகுமார் B. Sc.

— நிர்வாகி.

(44158)


## யாழ்ப்பாண மாநகரசபை

# 1997 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

**2J-11-96** ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி விளம்பரத்தின் பிரகாரம் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான கால எல்லை **27-12-96** ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

**வே. பொ. பாலசிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 16-12-1996 (சி/3740)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 04 — 12 — 1932 | 28 — 12 — 1995 |

## அமரர் நல்லதம்பி சிவஞானம்

(முன்னாள் இ. போ. ச. உத்தியோகத்தர், வல்வெட்டி)

திதி: **17 - 12 - 96**

அன்பின் திருவுருவாய், அணையாத ஒளி விளக்காய்
எமது குடும்பத்தின் குலவிளக்காய் இருந்த
எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று சென்றாலும் நீங்கள் என்றென்றும்
எங்கள் மனதிலிருந்து பிரியவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்

வேம் போடு கேணி,
பளை. (43945)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 12 — 1937 | 17 — 11 — 1996 |

## அமரர் கதிரிப்பிள்ளை இராசரட்ணம்

தெல்லிப்பழை

பாசமுள்ள எங்கள் அப்பாவே!
நாள்கள் 31 சென்றதையா!
உணர்விழந்து வாடுகின்றோம்
பாசமுள்ள எங்கள் குடும்பத்தின் விளக்கே!
சவுதியால் உங்கள் வரவை ஆவலுடன்-
எதிர்பார்த்தோமே
ஆனால் பறந்து வந்தீர்கள் உயிரற்ற சடலமாய்
ஏன் எங்களை பரிதவிக்க விட்டீர்கள்?
இன்று நிழலற்றுக் கண்ணீருடன் வாழ்கின்றோமே-
அப்பா.
உங்கள் நினைவினை என்றும் மறப்பதற்கில்லை.
தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள், மைத்துனர்கள்.**

துரை வீதி,
இணுவில். (9051)

# வெள்ளப் பெருக்கினால்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழுகி சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் மட்டுமன்றி பாவனையாளர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால்இருதரப்பினரும் கவலை அடைந்துள்ளனர். எதிர்காலத்தில் மரக்கறி வகைகளின் விலை பல மடங்கு உயர்வதற்கு மழை வழிவகுத்துள்ளது.

**சுகாதாரக் குறைபாடும் நோய்களும்**

குடாநாட்டு தரைக்கீழ் நீர் மட்டம் நில உயர வேறுபாடு இன்றி உயர்ந்திருப்பதாலும், நீரடைப்பு மலசல கூடங்கள் நெருக்கமாக இருப்பதாலும் கிணற்று நீர் மாசடையக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பல குடிதண்ணீர்க் கிணறுகள் மழை வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன.

மலசல கூடங்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் வெளி இடங்களிலும் பொது இடங்களிலும் கழிவுகள் தேங்கியுள்ளன.

இதனால் நீரினால் பரவக்கூடிய நோய்கள், காற்றினால் பரவக்கூடிய நோய்கள், தொற்றுநோய்கள், தோல்நோய்கள், பெருமளவில் பரவக்கூடிய அபாயம் உண்டு. காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களால் மரணங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது. குழந்தைகளின் உடல்நிலை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

குடாநாட்டின் பெரும் பகுதி வெள்ள நீர் தேங்கி சதுப்பு நிலங்களாகக் காணப்படுவதால் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. நுளம்பினால் தொற்றும் நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

கால நிலையும், காற்று நிலையும் சீர்குலைந்து மேலும் மழைபெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதால், மழைநீர் மேலும் தேங்கி நிற்காமல் வடிந்தோடக் கூடியதாக வடிகால் அமைப்புக்கள் உடனடியாகச் சீர் செய்யப்பட வேண்டும்.

வெள்ளம் வடிந்தோடக் கூடிய இடங்களில் உள்ள தடைகள், அணைகள் மாற்றி அமைக்கப்பட்டு, வெள்ளம் வெளியே ஓடக்கூடியதாக மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். இல்லாவிடில் மக்களுக்கு மேலும் பல்வேறு விதமான பாதிப்பு ஏற்படலாம். ★


# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

**மானிப்பாய்**


வைத்தியசாலையின் பிரசவ விடுதி **1997**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **2**ஆம் திகதி தொடக்கம் சிகிச்சை வழங்குவதற்காக **24** மணி நேரமும் திறந்திருக்கும்.

**டாக்டர் அம்பலவாணர் [V. O. G.]**

மகப்பேற்று நிபுணரின் கிளினிக் திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்களில் காலை **8-30 — 12-30** மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

**அதிபர்**
(44161) கிறீன் வைத்தியசாலை.


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பலாலி தெற்கு, வயாவிளான்

## அமரர் செல்லத்துரை உலகநாதன் J.P.

(கிராமசேவையாளர்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 05—06—1928 | 09—01—1995 |

பிறந்த குடும்பம் பெருமைபெற வாழ்ந்து
சிறந்த சேவையால் திக்கெல்லாம் புகழ்படைத்து
என்றென்றும் எங்களுக்குத் தோன்றாத்துணையாகி
நிறைவாழ்வு கண்டு நிம்மதியில் நிலைத்திருக்கும்
உங்களை நாங்கள் உளமாரத் துதிக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார், நண்பர்கள்.**

என்றும்:
''உதயகிரி'',
பலாலி தெற்கு,
வயாவிளான்.

இன்று:
''தேவி வாசம்'',
தியேட்டர் வீதி,
இணுவில். (44112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுருத்தவுக்கும் பிரபாகரனுக்கும்

# டிசம்பர் 7 மறக்க முடியாத நாள்!

பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் டிசம்பர் 7 ஆம் திகதிதான் மறக்க முடியாத நாள்.

டிசம்பர் 7 ஆம் திகதியை தனது அதிஷ்டமான தினமாக அனுருத்த ரத்வத்தை இனி எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார். அதே நாளை தனது துரதிஷ்டமான நாளாக பிரபாகரனும் மறக்காமல் நினைவில் வைத்திருப்பார்.

### புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்

வெலி ஓயாவுக்குச் சென்று கொண்டிருந்த அமெரிக்கத் தயாரிப்பான பெல் 412 ரக ஹெலிக் கொப்டர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் காலை 9 மணியளவில் தரையிறங்கியது.

தரையிறங்கினாலும் ஆபத்து, தரையிறங்காவிட்டாலும் ஆபத்து என்ற கட்டத்தில் தான் ஹெலியை தரையிறக்கினார் விமானி.

ஹெலி தரையிறங்கிக் கொண்டிருந்த போது உள்ளே இருந்தவர்களின் மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பது கற்பனைக்கும் எட்டாத ஒரு விஷயம்.

தரையிறங்கியவுடன் ஆயுத மேந்திய புலிகளால் தாம் சுற்றி வளைக்கப்படுவோம் என்று அவர்கள் நினைத்திருப்பர்.

பாதுகாப்பு விதிமுறைகளின் படி ஒரே வாகனத்தில் முக்கியமானவர்கள் பலர் பயணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

ஊர்காவற்றுறையில் ஒரே வாகனத்தில் சென்ற போது தான் டென்சில் கொப்பேக்கடுவ உட்பட படை உயரதிகாரிகள் மூவர் பலியானார்கள்.

ஒரே வாகனத்தில் ஏன் சென்றார்கள்? என்று அப்போது சந்தேகம் எழுப்பப்பட்டது.

அதே தவறை இப்போது மீண்டும் செய்த போதும், ஆபத்திலிருந்து மீண்டுவந்து விட்டதுதான் பேராச்சரியமாகிவிட்டது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்த, பொலிஸ்மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுரு உட்பட உயர் அதிகாரிகள ஒன்றாகவே பயணம் செய்திருக்கிறார்கள்:

புலிகளின் பிடியில் சிக்கியிருப்பார்களேயானால், முக்கிய தலைகள் எப்படி ஒன்றாகப் பயணம் செய்தனர் என்ற கேள்விதான் பெரிதாகக் கிளம்பியிருக்கும்.

முக்கிய தலைகள் தப்பி வந்து விட்டனர் என்பதால் எழுந்த ஆச்சரியம் சில மிகைப்படுத்தல்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

### புலிகள் உள்ள பகுதிகளால் ஹெலி சென்றதா?

''புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தரையிறங்கிவிட்டு தப்பி வந்து விட்டார்கள்'' என்பதுதான் பத்திரிகைகளில் வெளியான தலைப்புச் செய்திகள்.

புலிகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிக்கு மேலாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் செல்லும் ஹெலிக் கொப்டர் பறந்து சென்றிருக்க முடியாது.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதால், புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகாத பாதை வழியாகவே ஹெலிக்கொப்டரை செலுத்தியிருப்பார் விமானி.

வடபகுதி முகாம்களுக்கு செல்லும் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதலுக்கு உள்ளாகாத பாதை வழியாகவே செல்கின்றன.

அதுவும் ஹெலிக்கொப்டரால் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் பறக்க முடியாது என்பதால், விமான எதிர்ப்பு ஆயுதங்களால் சுடப்படும் ஆபத்து இருக்கிறது.

வெலி ஓயா முகாமை நோக்கிப் பறந்த ஹெலிக் கொப்டரும் வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை அண்டிய வான்பாதை வழியாகவே சென்றிருக்கிறது.

அவ்வாறு சென்றமையால் தான் பம்பைமடுப் பகுதியில் உடனடியாக தரையிறங்க முடிந்திருக்கிறது.

வவுனியாவுக்கு மேற்குப் பகுதியில் இராணுவக் காவலரண்கள் மன்னார் வீதி வரை அமைந்துள்ளன.

இராணுவத்தினரின் முன்னரங்க காவலரண்களில் இருந்து கிட்டத்தட்ட ஐந்து கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ள பகுதிதான் பம்பைமடு.

வவுனியாவின் மேற்கே பம்பைமடு இருக்கிறது. பம்பைமடுவுக்கும் இராணுவக் காவலரண்களுக்கும் குறுக்கே மடுறோட் இருக்கிறது. அந்த வீதியை குறுக்காகக் கடந்து] சென்றால் காட்டுப்பகுதி வரும். அதையும் தாண்டினால்தான் பம்பைமடு கிராமம் இருக்கிறது.

### படையினர் புலிகள் நடமாடாத இடம்

அந்த இடைப்பட்ட காட்டுப்பகுதியில் படையினரும், புலிகளும் அதிகமாக நடமாடுவதில்லை. படையினரின் முன்னரங்க காவல் நிலைகளில் இருந்து மோட்டார் தாக்குதல் நடத்தக்கூடிய பகுதி என்பதால் புலிகள் அங்கு நிலைகொண்டிருப்பதில்லை.

''தமது முன்னரங்க காவலரண்களின் பாதுகாப்புக்காக அக் காட்டுப்பகுதியை நோக்கிப் படையினர் திடீரென்று முன்னேறிச் சென்று விட்டு திரும்பிவந்துவிடுவர்.

இராணுவ முன்னரங்க காவல் அரண்களை தாக்குவதற்கு தகவல் திரட்டவும், கண்காணிக்கவும் புலிகள் இரவு நேரங்களில் அப்பகுதிகளில் நடமாடுவர்.

சமீபத்தில் வவுனியாவுக்கு மேற்கே உள்ள இராணுவக் காவலரண்கள் புலிகளால் தாக்கப்பட்டன. புலிகள் தாக்கிவிட்டுச் சென்றபின்னர் மீண்டும் இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று புலிகளுக்கு சந்தேகம் இருக்கிறது.

அதனால் இரவு நேரங்களில் படையினரின் நடமாட்டங்களைக் கவனிக்க புலிகளின் உளவுப் பிரிவுவைச் சேர்ந்த இரண்டு மூன்று பேர் மட்டும் அப்பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இரவோடு இரவாக அல்லது அதிகாலை நேரத்தில் தான் படையினர் தமது நடவடிக்கைகளை ஆரம்பிப்பர். இது வரை கால அனுபவம் அது தான். அதனால் அதிகாலை வரை கண்காணித்து விட்டு புலிகளின் உளவுப்பிரிவினர் திரும்பிச் சென்றுவிடுவார்கள்.

### பம்பை மடு பின்தங்கிய கிராமம்

பம்பைமடு மிகப் பின்தங்கிய பழைய கிராமம். அங்கு பத்துக்கு உட்பட்ட குடும்பங்கள் தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியிருக்கின்றன.

அதனால் அங்கு புலிகளின் முகாமோ காவல் நிலைகளோ கிடையாது. தினமும் ஒரு புலிகள் இயக்க உறுப்பினர் அங்கு பகலில் வந்து செல்வார். அவரை 'றெக்கி' எடுப்பவர் என்று அழைப்பார்கள்.

இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகள் எங்கும் புலிகள் அங்குலம் அங்குலமாக நிலைகொண்டிருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்ப்பவர்களுக்கு, டிசம்பர் 7 ஆம் திகதிச் சம்பவம் பேராச்சரியம் தான்.

**கொழும்பிலிருந்து வெளிவரும் "தின முரசு" வார இதழில் "தரையிறக்கமும்—தரைநிலைவரமும்" என்ற தலைப்பில் "நாரதர்" எழுதிய "எக்ஸ்ரே ரிப்போட்" இங்கு மறு பிரசுரஞ் செய்யப்படுகிறது.**

வவுனியாவில் இருந்து படையினர் செல்லாமல் இருந்தாலும், விமானப்படையினரின் ஹெலி அவர்களைக் கண்டிருக்காவிட்டாலும், தரையிறங்கியவர்கள் வவுனியா இராணுவ முன்னரங்க நிலைக்கு நடந்தே வந்திருப்பார்கள்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத்தில் பணியாற்றியவர். இராணுவத் தளபதியும், உயரதிகாரிகளும் அவருடன் இருந்தனர். அதனால் ஹெலி தரையிறங்கியதும் புத்திசாலித்தனமாக துரிதமாகச் செயற்பட்டனர்.

### வழிகாட்டிய விவசாயி

ஹெலி தரையிறங்கிய இடத்தின் அருகே உள்ள ஒரு தமிழ் விவசாயியை அழைத்துப் பாதையைக் காட்டுமாறு கேட்டுள்ளனர்.

வோக்கி டோக்கி இருந்தும்கூட அதனை உடனடியாகப் பயன்படுத்தவில்லை. வோக்கியில் தொடர்பு கொண்டால் அதனைப் புலிகள் இடைமறித்துக் கேட்டு விடுவார்கள் என்பதால் மிக ஜாக்கிரதையாகவே செயற்பட்டுள்ளனர்.

வழிகாட்டிய விவசாயி நினைத்திருந்தால் புலிகளின் பகுதி நோக்கி திசைமாற்றி அழைத்துச் சென்றிருக்கலாமோ?

அப்படிச் செய்திருக்க முடியாது. வழக்கமாக விமானியிடம் திசையறிகருவியும், ஒரு கைத்துப்பாக்கியும் பையில் இருக்கும். எதிர்பாராத விபத்துக்களில் சிக்கினால் தப்பிவருவதற்குத் தான் அந்த முன்னேற்பாடு. அது தவிர தரையிறக்கப்பட்ட பகுதி காட்டுப்பகுதி என்பதால் மறைந்து மறைந்து நோட்டமிட்டு முன்னேறும் சாதகம் இருந்திருக்கிறது.

சாதாரணமாக ஐந்து கிலோ மீட்டர் தூரத்தை நடந்து கடப்பதற்கு ஒரு மணிநேரம் போதும். ஆனால் தரையிறங்கியவர்கள் இராணுவ முன்னரங்க நிலையைச் சமீபிக்க கிட்டத்தட்ட நான்கு மணி நேரங்கள் சென்றுள்ளன.

ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்து நடமாட்டங்கள் இருக்கிறதா என்று நோட்டமிட்டு, தாம் செல்லும் திசை சரியாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்தியபடி தான் வந்திருக்கிறார்கள்.

வவுனியாப்பகுதி பரிச்சயமான வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் சுமதி பாலாவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருடன் சென்றமை மற்றொரு மேலதிகச் சாதகமாக அமைந்து விட்டது.

ஒரு வேளை புலிகள் அப்பாதை வழியாக வந்திருந்தால் கூட மறைந்து கொண்டு அவர்கள் கண்ணில் படாமல் தப்பியிருக்க முடியும்.

ஹெலிக்கொப்டர் தரையிறங்கும்போது புலிகள் கண்டிருந்தால் மட்டுமே ஆபத்தாகியிருக்கும். அல்லது பம்பைமடு கிராமம் ஜன நடமாட்டம் அதிகமுள்ள பகுதியாக இருந்திருந்தால் புலிகளுக்கு செய்தி போயிருக்கும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், உயரதிகாரிகளும் சென்ற ஹெலிக்கொப்டரைக் காணவில்லை என்றதும் ஜனாதிபதியும், பாதுகாப்பு தரப்பினரும் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

விமானப்படை ஹெலிக் கொப்டர் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டது.

ஆனாலும், இராணுவ முன்னரங்க நிலைகளுக்கு அருகே வந்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சரோடு வந்த இராணுவ உயரதிகாரிகள் வோக்கியில் தொடர்பு கொண்ட பின்னர்தான் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரம் தெரிய வந்தது.

அதன் பின்னர்தான் இராணுவத்தினர் தமது முன்னரங்க நிலைகளில் இருந்து முன்னேறிச் சென்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு இராணுவத்தினர் சென்றதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அவர்களைச் சந்திக்க முன்னரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி சென்றிருந்தால் அச்சத்தம் கேட்டு புலிகள் உஷாராகியிருப்பர்.

அது தவிர தரையிறங்கியவர்கள் வந்து கொண்டிருக்கும் திசையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு முன்னேறுவது அங்கிருந்து வருபவர்களுக்குத்தான் ஆபத்தாகிவிடும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், உயரதிகாரிகளும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர்தான் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

செய்தி அறிந்த புலிகளின் அணிகள் வரக்கூடும் என்பதால் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஹெலி தரையிறங்கிய பகுதியை நோக்கியும் படையினர் முன்னேறினார்கள்.

புலிகளின் கையில் சிக்கிவிடும் என்பதால் ஹெலியை உடனடியாகத் தகர்த்து விடுமாறு உத்தரவிடப்பட்டது.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரையும் உயரதிகாரிகளையும் படையினர் சென்று மீட்டுவந்தனர் என்பது சற்று மிகைப்படுத்தல்தான்.

தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்றப்பட்ட ஒரு பகுதியில் சிக்கிக்கொண்டால் எப்படி சமயோசிதமாக தப்பிக் கொள்ளவது என்பது இராணுவப் பயிற்சியில் இருக்கிறது.

அதற்கேற்ப துரிதமாகச் செயற்பட்டு மீண்டு வந்திருக்கிறார்கள்.

ஹெலிக்கொப்டர் தரையிறங்கியதை புலிகள் காணாமல் போனதுதான் அதிஷ்டம்.

ஹெலிக்கொப்டர் தரையிறங்கிய தகவல் எட்டாமல் போனதை நினைத்து பிரபாகரன் நிச்சயம் வருந்தியிருப்பார். யாழ். குடாநாட்டை இழந்தபோதுகூட அந்தளவு வருத்தப்பட்டிருக்கமாட்டார்.

புலிகளின் குரல் மிகச் சோகமாக அந்தச் செய்தியை அறிவித்தது. எனினும் அது குறித்து சொந்தக் கருத்து எதனையும் கூறவில்லை.

''மயிரிழையில் உயிர்தப்பி வந்தார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன'' என்று மட்டுமே கூறியது புலிகளின்குரல்.

★

# பட்ஜெட்டை நிறைவேற்ற முடியாத நிலையில் கொழும்பு மாநகர சபை

## உறுப்பினர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

கொழும்பு, டிச. 17

கொழும்பு மாநகர சபையின் ஆளும் ஐ. தே. க. மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதால் வரவு - செலவுத்திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது.

கொழும்பு மாநகர சபை மேயர் கணேசலிங்கத்துக்கும், எதிர்க்கட்சி உறுப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

அதேசமயம் மேயர் கணேசலிங்கம் அரசாங்கத்துக்கு சாதகமாக செய்யப்படுவதாகக் குற்றஞ்சாட்டி ஐ.தே.க. உறுப்பினர்கள் சபை நடவடிக்கைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

கடந்தவாரம் வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அச்சமயம் மேயரும், உதவி மேயரும் மட்டுமே சபையில் இருந்தனர்.

சபையின் வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமைக்குள் சபையால் ஏற்கப்பட வேண்டும்.

சபையால் ஏற்கப்படாவிட்டால் அடுத்த ஆண்டுக்கான நிதியை சபை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் —

சபை கலைக்கப்படவும் கூடும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் சுகாதார அமைச்சர் பௌசி இந்த விடயத்தில் தலையிட்டு சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

(இ-3-150)

# குழந்தை காயம்

மீசாலையில் நான்கு நாள்களுக்கு முன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒரு வயதுக் குழந்தை ஒன்று காயமடைந்தது.

மீசாலையைச் சேர்ந்த சிவரஞ்சன் அருள்நாத் என்ற இக் குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்வுயோசனைகள் குறித்து ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன?

## பெப். 15ஆம் திகதிக்குமுன் தெரிவிக்க காலக்கெடு

கொழும்பு, டிச. 17

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஐ.தே.கவின் நிலைப்பாடு என்ன?

இதனைப் பகிரங்கமாக அறிவிக்கக்கோரி அரசாங்கம் ஐ.தே.கவுக்கு காலக்கெடு விதித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன் ஐ.தே.க. தனது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

ஐ.தே.க. தனது நிலைப்பாட்டை அதற்குள் தெரிவிக்காது விட்டால் அதிகாரப் பரவலாக்கல் யோசனை மக்கள் கருத்துக் கணிப்புக்கு சமர்ப்பிக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

மக்கள் கருத்துக் கணிப்புக்குப் பின்பே அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றத்துக்கு வரும்.

(இ-3-150)

## புளுக்குனாவவில் மீண்டும் இராணுவ முகாம் அமைப்பு

கொழும்பு, டிச. 17

கடந்த புதன்கிழமை தாக்கி அழிக்கப்பட்ட புளுக்குனாவ அதிரடிப் படை முகாம் இராணுவத்தினரின் பொறுப்பில் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் முன்னர் பணியாற்றிய அதிரடிப்படையினர் கிழக்குப் பகுதியில் உள்ள ஏனைய அதிரடிப்படை முகாம்களுக்கு இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

அதேவேளை, புதுக்குடியிருப்பில் கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலில் கொல்லப்பட்ட மேஜர் ரங்கன் நினைவாக புளுக்குனாவ முகாம் தாக்கப்பட்டதாகவும் —

இத்தாக்குதலில் கப்டன் ஒருவரும், லெப்டினன்ட் ஒருவரும், 2 ஆம் லெப்டினன்ட்கள் ஏழு பேரும் கொல்லப்பட்டதாகவும் —

புலிகள் அறிவித்துள்ளனர்.

(உ-3-150)

## பாம்புக் கடி மருந்து

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் பாம்புக்கடிக்கான ஊசி மருந்துபோதியளவு கையிருப்பில் இருப்பதாக ஆஸ்பத்திரி மருந்தகப்பகுதியில் இருந்து தெரிய வருகிறது.

இந்த ஆஸ்பத்திரிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பாம்புக் கடிக்கான சிகிச்சைக்கு வேறு ஆஸ்பத்திரிகளுக்கு அலைய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-15)

## புளுக்குனாவ தாக்குதல் பற்றிய உளவு எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டது!

கொழும்பு, டிச. 17

அம்பாறை மாவட்டம் புளுக்குனாவ அதிரடிப் படை முகாம் தாக்கப்படப் போகிறது என்று புலனாய்வுத் துறை இராணுவத் தலைமைக்கு முன் கூட்டியே தகவல் கொடுத்தும் அது உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக தற்போது தெரிய வந்திருக்கின்றதாம்.

புளுக்குனாவ அதிரடிப் படை முகாமைத் தாக்க விடுதலைப் புலிகள் இறுதி ஒத்திகையைக் கூட செய்து விட்டார்கள் என்று இராணுவத் தலைமைக்கு புலனாய்வுத் துறை தகவல் கொடுத்தது என்றும் —

ஆனால் அந்த தகவல் உதாசீனம் செய்யப்பட்டு விட்டது என்றும் —

அது ஏன் என்று தற்போது கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்றும் —

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

(உ-3-150)

## முஸ்லிமாக நடித்த பெண் கைதாம்!

தாண்டிக்குளம் சோதனை முகாமில் முஸ்லிமாக நடிக்க முற்பட்ட தமிழ்ப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

முஸ்லிம் பெயருடன் போலி அடையாள அட்டை வைத்திருந்த இவரது பெயர் கதிரவேல் நாகம்மா என்று விசாரணையின் போது தெரிய வந்துள்ளதாம்.

36 வயதான இப்பெண் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## 'பாடும் மீன்' நிறுத்தம்

கிழக்கு மாகாணத்தில் 'பாடும் மீன்' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து கடந்த மூன்று நாள்களாக இரு முனைகளில் முன்னேறிய இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகலுடன் தமது நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டனர்.

வவுணதீவிலிருந்து செங்கலடிப் பாதையில் உன்னிச்சை வரை முன்னேறிய இராணுவத்தினர் அப்பகுதியில் தங்கியுள்ளனர்.

## வாசகர் திருமுகம்

### மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு

இடம் பெயர்ந்து குடா நாட்டில் வந்திருந்த காரைநகர் மக்களில் ஒரு பகுதியினர் தமது நிரந்தர வசிப்பிடங்களுக்குச் சென்றுவிட்டனர். இவர்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு கொடுக்கப்பட்டு வருகிறது. ஒரு பகுதியினர், காரைநகருக்குச் செல்லாமல், இடம்பெயர்ந்திருந்த இடங்களிலேயே இப்பொழுதும் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு மேற்படி கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாதெனவும், காரைநகருக்குச் சென்று குடியேறினால் தான் கொடுக்கப்படுமென்றும் அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

பிரச்சினை தோன்றுவதற்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் கடை வைத்திருக்கும் காரைநகர் முதலாளிமார், கடைச் சிப்பந்திகள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் முதலான பல்வேறு தரத்தினர் காலையில் காரைநகரிலிருந்து புறப்பட்டுக் குடாநாட்டுக்கு வந்து, தத்தம் கருமங்களை முடித்துக் கொண்டு மாலையில் வீட்டுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆனால் இப்போது அந்த வாய்ப்பு இல்லை.

பொன்னாலைப் பாதை பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதாக இருந்தால், தலையைச்சுற்றி மூக்கைத்தொடுவது போலக் காரைநகரிலிருந்து தோணி மூலம் ஊர்காவற்றுறைக்கு வந்து, பின்னர் அங்கிருந்து பஸ் மூலம் சரவணை, வேலணை, பண்ணை வழியாகத் தான் வரவேண்டும்; பஸ்ஸிலிருந்து இறங்கி ஏறவும் வேண்டும்' சிறிது தூரம் நடை பழகவும் வேண்டும். இந்த விதமாகப் பிரயாணஞ் செய்வது நடைமுறைக்குச் சாத்தியமாகாது. எனவே தான் மேலே குறிப்பிட்டவர்கள் காரைநகருக்குச் செல்ல விரும்பாமல் குடாநாட்டிலேயே இருக்கிறார்கள்.

தொழிலாளர்களுக்கும், மீனவர்களுக்கும் இப்போது காரைநகரில் தொழில் வாய்ப்புக் குறைவாகவே இருக்கிறது. எனவே, இவர்களும் அங்கே செல்வதற்குப்பின்னிற்கிறார்கள்.

இவற்றையெல்லாஞ் சிந்தியாது, காரைநகருக்குச் சென்றால் தான் கொடுப்பனவு கொடுக்கப்படும் என்று அரசு பிடிவாதமாக நிற்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. ஆகவே, இந்த விஷயத்தை மேலதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி ஆவன செய்வதற்கு முன்வருமாறு யாழ்ப்பாண அரச அதிபரைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்,

மாவடி,
வட்டுக்கோட்டை.

க. வைத்தீசுவரன்

# இ.தொ.காவும் முஸ்லிம் காங்கிரஸும் தவிர்த்தா? அரசுடன் இணைந்தா?

## பொதுப் பட்டியலில் இடம்பெற வைக்க முயற்சி

கொழும்பு, டிச. 17

தெற்கில் ஏப்ரலில் நடத்த உத்தேசித்துள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் இ.தொ.காவையும் முஸ்லிம் காங்கிரஸையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுவேட்பாளர் பட்டியலில் போட்டியிட வைக்கும் முயற்சியில் அரச தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது விடயமாக அமைச்சர் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமானுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த, நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க ஆகியோர் பேச்சு நடத்தினர்.

மலையக மக்களின் தீர்க்கப்படாமல் எஞ்சியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக இந்தப்பேச்சு இடம்பெற்றது.

பேச்சுக்கள் பலன் அளிக்கும் வகையில் இடம்பெற்றதாக ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

இ.தொ.காவுடன் நடைபெறும் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில் சப்ரகமுவ, ஊவா மாகாணத்தில் அரசு கூடிய இடங்களைக் கைப்பற்ற முடியும் என நம்பப்படுகிறது.

(இ-150-3)

## அம்பாறை-கண்டி வீதி: முடக்க புலிகள் திட்டம்?

அம்பாறை மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படையினருக்கு பொருள்களை அனுப்பும் ஒரே விநியோகப் பாதையான கண்டி — அம்பாறை வீதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அப்பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள படையினருக்கான விநியோகத்தைத் தடை செய்வதே புலிகளின் நோக்கம் என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'சண்டே லீடர்' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளது.

கிழக்கில் புலிகள் எதிர்காலத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள தொடர் தாக்குதல்களின் ஆரம்பமாக புளுக்குனாவ அதிரடிப் படைமுகாம் மீதான தாக்குதல் இருக்கலாம் என்றும் — அந்தப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

(உ- 3- 150)

## 200 தபால் பொதிகள் கப்பலில் தூங்குகின்றன

யாழ்ப்பாணம், டிச. 17

குடாநாட்டுக்கான சுமார் 200 தபால் பொதிகள் காங்கேசன்துறை வந்த ''லங்கா கல்யாணி'' கப்பலில் தேங்கிக் கிடக்கின்றன என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒன்றரை மாத காலமாக கொழும்பில் தேங்கிக் கிடந்த இந்ததபால் வடக்கு நோக்கி வந்த ''லங்கா கல்யாணி'' கப்பலில் ஏற்றப்பட்டன.

தற்சமயம் காங்கேசன்துறையில் தரித்துள்ள இக்கப்பலில் இருந்து அடுத்த சில நாள்களில் பொருள்கள் இறக்கி ஆரம்பித்ததும் இந்த தபால் பொதிகளும் இறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## விசேட அ. அட்டை

சங்கானை மேற்கு சங்கானை மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு எதிர் வரும் 19 ஆம் திகதி சங்கானை மேற்கில் வைத்து விசேட அடையாள அட்டை விநியோகிக்கப்படும்.

### மீண்டும் வேண்டும் தந்திச்சேவை

உள்ளக, வெளிமாவட்ட, சர்வதேச தொலைபேசிச் சேவைகள் யாழ்ப்பாண நகரில் ஆரம்பிக்கப்பட்டதை வரவேற்கும் அதேபோல தந்திச் சேவையையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். அது மக்களால் விரும்பத்தக்கது, வேண்டத்தக்கது, போற்றத்தக்கதும் கூட.

அஞ்சற் சேவை தாமதப்படும், தடங்கற்படும் இக்கால கட்டத்தில் தந்திச் சேவை அவர்களின் அன்றாட, அவசரமான, அவசியமான தேவைகளை ஓரளவு நிறைவேற்றும் என்பது யாவரும் அறிந்த விடயம்.

குடாநாட்டில், யாழ். நகருக்கு வெளியில் உள்ள பிரதேசங்களிலிருந்து தொலைபேசிச் சேவை பெறுவதற்காக அப்பகுதிவாழ் மக்கள் போக்குவரத்து அசௌகரியங்கள் மத்தியில் யாழ். பிரதம அஞ்சலகத்துக்கு வருகிறார்கள். அங்கு பல மணிநேரம் காத்திருந்து தொலைபேசித் தொடர்பு பெற வேண்டிய நிலையை, தந்திச் சேவையை ஆரம்பித்ததன் மூலம் ஓரளவு குறைக்கலாம், தவிர்க்கலாம்.

சில கருமங்களை நிறைவேற்ற நேரடித் தொடர்பு அவசியமற்ற, தேவையற்றதுமாக இருக்கலாம். ஆனால் அந்த அலுவல்களைப் பூர்த்தி செய்ய தந்திச்சேவை கைகொடுத்து உதவும்.

குடாநாட்டிற்குச் சுமார் நானூறு தொலைத் தொடர்பு இணைப்புகள் விரைவில் வழங்கப்படுமென தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறாயின் இங்குள்ள அனைத்து அஞ்சலகங்களுக்கும் உப அஞ்சலகங்களுக்கும் முன்னுரிமை கொடுத்தும் இணைப்புகள் வழங்கும் பட்சத்தில் வெளிப்பிரதேச மக்கள் தத்தம் பகுதியில், அண்மையிலுள்ள அஞ்சலகங்களிலோ, உப அஞ்சலகங்களிலோ தந்திகளை, தந்திக்காசுக்கட்டளைகளை ஒப்படைக்கவோ, தங்களுக்கு வருபனவற்றை பெற்றுக்கொள்ளவோ முடியும். வெளி இடங்களுக்கு இதற்காக அலைய வேண்டிய நிலையும் ஏற்படாது,

ஆரம்ப கட்டமாக யாழ். பிரதம அஞ்சலகத்திலும் அதற்கு அண்மையிலுள்ள அஞ்சலகங்கள், உப அஞ்சலகங்கள் ஆகியவற்றிலும் தந்திச் சேவையை மேற்கொள்வது மக்களுக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும்.

தொலைபேசிச் சேவை பெறுவதில் சில வசதியீனங்களைக் கொண்டதாலும் சீரற்ற அஞ்சற்சேவை நிலவுவதாலும், தந்திச்சேவை ஒரு வரப்பிரசாதமாக, மகத்தான கைங்கரியமாக விளங்குமென்பது வெள்ளிடை மலை.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இதை ஒரு முக்கிய பணியெனக்கொண்டு செயற்பட வேண்டும்

நல்லூர்.

ரி. சிவமூர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மார்கழியின் கீற்றுகள்

"மாதங்களில் நான் மார்கழி" என்று கண்ணன் கூறினான். மார்கழி பொதுவாகவே ஆன்மீகத் தேடலுக்கான மாதமாகக் கருதப்படுகிறது.

இலங்கை அரசியலைப் பொறுத்த வரையிலும், மிகக் குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில் மார்கழி மாதம் ஏனைய மாதங்களை விட மிக வித்தியாசமானதாகவே இருந்து வருகிறது.

இனப்பிரச்சினை, அதனால் உருவாகியுள்ள போர் ஆகியன குறித்து மக்களுக்குப் பேச்சளவிலேனும் நல்ல செய்திகளைக் கொண்டு வரும் மாதமாக மார்கழி மாதம் விளங்குவது உண்டு. இந்தவருடத்தில் மட்டுமன்றி, இதற்கு முந்திய பல வருடங்களிலும் மார்கழி மாதத்திலேயே சமாதானம், பேச்சு வார்த்தை ஆகியன பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவது வழக்கம்.

இம்முறையும், இப்போதும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு மூன்றாவது தரப்பு ஒன்று மத்தியஸ்தம் வகிப்பது குறித்து அடிக்கடி பேசப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதில்லை; வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையற்றது என்ற அரசின் இறுக்கமான நிலைப்பாடு சற்றுத்தளர்ந்துவிட்டது என்று கருத வைக்கும் விதத்தில் இப்போது கருத்துக்கள் கசியத் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டு — மூன்றாம் தரப்பு — மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயார் என்று ஜனாதிபதி கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

எனினும் அதன் பின்னர் அரச தரப்பில் பெரிதாக அலட்டிக் கொள்ளப்படவில்லை. பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் இங்கு விஜயம் செய்த போது இரு தரப்புக்களும் கேட்டுக் கொண்டால் தமது நாடு மத்தியஸ்தராக வருவதற்குத் தயார் என்று கூறியதோடு அது மறந்த கதையாகிப் போயிற்று.

அதன் பின்னர், இப்போது, நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், அரசமைப்பு, நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸும் வெளிநாட்டு மத்தியஸ்தம் குறித்து பேசியிருக்கிறார்கள்; கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள்.

பேச்சுவார்த்தையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில், சமாதானத்தை உருவாக்குவதில் அரசுக்கு நாட்டம் உண்டு என்பதற்கான கீற்றுச் சமிக்கைகளாக இவை மின்னியிருக்கலாம்.

முந்திய அரசின் காலத்திலும் அரசியல் சூழ்நிலை மிக இறுக்கமாக இருந்த வேளைகளில், நல்லன நடக்கப் போவதாக மார்கழிகளில் சில ஒளிக்கீற்றுக்கள் மின்னிக் கழிந்தது உண்டு.

அவை போலன்றி, இம்முறையாவது உருப்படியாக ஏதாவது நடக்க வேண்டுமாயின், இரு தரப்புகளும் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். நடக்குமா?

# காணாமற் போனோர் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும்

## அமைச்சர் பீரிஸிடம் நீலன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 17

"யாழ்ப்பாணத்தில் 500க்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர். இது தொடர்பாக நீதி அமைச்சர் அதிக அக்கறை எடுக்க வேண்டும்" தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான கலாநிதி நீலன் திருச்செல்வம் நீதி அமைப்பு விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"காணாமற் போனோர்" அதிக எண்ணிக்கையாக உள்ள நாடு இலங்கை என நம்நாடு பெயரெடுத்துள்ளது.

ஆயுதப் படைகளின் ஒழுங்கீனங்கள் குறித்து குற்றச்சாட்டுகளும் —

வடக்கில் காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பும் — தற்போது தோன்றியுள்ள பிரச்சினைகள் ஆகும்.

இது சகல இலங்கையரினதும் உரிமைகளுக்கும் அச்சுறுத்தலாகும். இது தொடர்பாக விசாரணை மேற் கொண்டு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

வழக்கின்றி பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்கு விசாரணையின்றி பல காலமாக பலர் வைக்கப்பட்டுள்ளனர்.

கொடூரமான முறையில் மனிதாபிமானமற்ற முறையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் உண்ணாவிரதம் இருக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

தடுப்புக் காவலில் உள்ளோரின் வழக்குகள் விசேட மேல் நீதிமன்றத்தின் மூலம் விசாரணை செய்யப்பட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, டிச. 17

முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி தொடர்பாக சில சிரேஷ்ட படை அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக படை உள்வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சிலர் மீது ஏற்கனவே கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி குறித்து விசாரணை நடத்திய இராணுவ நீதிமன்றம் தனது அறிக்கையை சமர்ப்பித்த பின்பே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## மாணவியை மணம் செய்ய சிப்பாய் வற்புறுத்தினாராம்!

### கிழக்கே சென்ற செய்தியாளர் தகவல்

கொழும்பு, டிச. 17

கிழக்கில் பணி புரியும் சிப்பாய் ஒருவர் தம்மைத் திருமணம் செய்யுமாறு பாடசாலை மாணவி ஒருவரை வற்புறுத்தியதால் அந்த மாணவி பள்ளிப்படிப்பை இடை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் அடைபட்டுக்கிடப்பதாக சமீபத்தில் கிழக்கே சென்ற கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப கொழும்பு ஆங்கில வார இதழின் செய்தியாளர் சமீபத்தில் கிழக்கு நிலை பற்றி அறிய அங்கு சென்றிருந்தார்.

அங்கு தாம் சந்தித்த மனித உரிமை வாதி ஒருவருடன் நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக விவரிக்கையிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப பாடசாலை மாணவியின் பெயர் சாந்தி (18 வயது) என்றும் —

இந்த மாணவியின் தகப்பனாரும் சிப்பாயினால் மிரட்டப்பட்டார் என்றும் — அச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## விதை உருளைக் கிழங்கு செய்கை மழையால் தாமதம்

வலி. தென். மேற்கு டிச 17

தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால் விதை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் ஓர் சிலரைத் தவிர மற்றையவர்கள் விதை உருளைக்கிழங்கை இன்னமும் வீடுகளிலேயே வைத்திருக்கின்றனர்.

மழை ஓய்ந்த பின்னர் நடுகையை ஆரம்பிக்க பலரும் தயாராக உள்ளனர். (இ-145)

## மீளக்குடியமர்வு கொடுப்பனவு; சங்கானையில் வேலை ஆரம்பம்

வலி-தென் மேற்கு, டிச. 17

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய குடும்பத்தினருக்குரிய ஐயாயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 626 குடும்பத்தினரின் பெயர்ப்பட்டியல் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வங்கிகளில் கணக்கு வைத்திருப்போர் அந்தந்த வங்கிகளில் தமது பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என சங்கானை பிரதேச செயலகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிக்கு மட்டும் 172 பேரின் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதில் 160 பேர் தமது பணத்தைப் பெற்றுவிட்டார்கள் என்று இக் கிராமிய வங்கி முகாமையாளர் திருமதி எஸ். ஆனந்தராசா தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் வெளியிடங்களுக்கு சென்றுள்ள சிலர் மட்டும் இப்பணத்தை பெறவில்லை என்றும் அவர் கூறினார். (இ-145)

## நாளை

**மார்கழி 3**
**புதன்கிழமை**
**திதி:** நவமி
பிற்பகல் 4.31 வரை.
**நட்சத்திரம்:**
உத்தரட்டாதி
முன் இரவு 8.30 வரை.
**ராகுகாலம்:** 12.23-1.53
**சுபநேரம்:** 4.53 - 6.23
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பெண் மரணம்

நேற்று முன்தினம் மாலை காங்கேசன்துறை வந்த கப்பலில் பயணம் செய்த வயோதிபரான பயணி ஒருவர் காங்கேசன் துறையில் மரணமானார் என தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன் துறைக்கு மாலை 4-30 மணியளவில் கப்பல் வந்து சேர்ந்ததால் ஊரடங்கு காரணமாகப் பயணிகள் காங்கேசன்துறை பட்டணசபை கட்டடத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

வயோதிபரான இந்தப் பயணி அங்கு இரவு மரணமானார் என்றும் —

அவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## ஹெலி தரை இறங்கிய விவகாரம்:

## ராணுவ தளபதி, பொலீஸ்மா அதிபர் விசாரணைக்குழு முன் சாட்சியம்

வவுனியா பம்பைமடுவில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, பொலீஸ்மா அதிபர் ஆகியோர் சென்ற ஹெலிக்கொப்டர் இறக்கப்பட்ட விவகாரம் குறித்து விசாரணை செய்து வரும் குழு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை ராணுவத் தளபதி றோகான் தளுவத்தவும், பொலீஸ்மா அதிபர் ராஜகுருவும் வாக்கு மூலமளித்தனர்.

இதேவேளை — ஹெலியில் சென்றவர்கள் வவுனியா வருவதற்கு வழிகாட்டிய விவசாயியான திருச்செல்வம் என்பவரும் அவரது இரு பிள்ளைகளும் வவுனியாவுக்கு கூட்டிச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3-150)

## ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை நேர்முகப்பரீட்சை 24ஆம் திகதி

பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் 1997 ஆம் ஆண்டு அனுமதி கோரி விண்ணப்பித்தவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சைகள் எதிர் வரும் 24 ஆம் திகதி காலை 9-00 மணியில் இருந்து யாழ். கல்வி வலயம் ஒன்றின் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

விண்ணப்பித்தவர்களில் தகுதியுடைய அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கடிதங்கள் கிடைக்கப் பெறாத, தகுதியுடையோரும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கலாம் என கலாசாலை அதிபர்கள் தெரிவித்தனர்.

ஆங்கில நெறி தவிர்ந்த ஏனைய நெறிகளுக்கு ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த அனைவரும் தகுதியுடையவர்களாவர்.

31-12-93 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்றவர்கள் மட்டும் ஆங்கில நெறிக்குத் தகுதியுடையவர்களாவர். (இ-3)

## தீவுப்பகுதி தபாலக ஊழியரின் சம்பளம் வழங்க அமைச்சர் பணிப்பு

காரைநகர், டிச. 17

தீவுப்பகுதியில் மீள நியமனம் பெற்று கடந்த ஆறு மாதகாலமாகச் சம்பளம் பெறாத நிலையில் இருந்த தபாலக ஊழியர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்க பிரதி தபால் தொடர்பு அமைச்சர் ஹிஸ்புல்லா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இ. உ. பாஸ்கரன் இந்த விடயம் தொடர்பாக பிரதி அமைச்சருடன் பேச்சு நடத்தியதன் பலனாக தபாலக ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படவிருக்கிறது. [இ-3]

## சம்பள அதிகரிப்பு ஜனவரியில்

கொழும்பு, டிச. 17

அரசாங்க ஊழியர்கள், மாகாணசபை ஊழியர்கள் ஆகியோரின் சம்பளம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படும்.

தற்போது குறிப்பிட்ட சில சேவைகளில், பதவிகளில் அல்லது தரங்களில் வழங்கப்படும் சகல படிகளையும் சேர்த்து ஒன்றிணைக்கப்பட்ட சம்பளமாக புதிய சம்பளத் திட்டம் அமையும்.

சம்பள அதிகரிப்பின் 40சதவீதக் கொடுப்பனவு ஜனவரி முதலாம் திகதியில் இருந்தும், மிகுதி 60 சதவீதக் கொடுப்பனவு 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்தும் 2கட்டங்களாக அமுல் செய்யப்படும்.

ஜனவரிமாதம் முதலாம்திகதிக்குப் பின்னர் சேவையில் இருந்து இளைப்பாறும் ஊழியர் ஒருவரின் முழுச் சம்பள அடிப்படையில், அவருக்கான ஒய்வூதியப் பணம் கணக்கிடப்படும்.

1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இளைப்பாறும் ஒய்வூதியக்காரர்களுக்கு படிகள் உட்பட தற்போதைய மொத்த ஒய்வூதியத்தை அடிப்படையாகக் கொண்டு, 10 சதவீத அதிகரிப்பு வழங்கப்படும். (இ-3)

## குடிதண்ணீர் திட்டம்

இயங்காமல் இருக்கும் நவாலி தெற்கு குடிதண்ணீர் விநியோக திட்டத்தை மீள் இயக்குவதற்காக வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் 1996 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஓர் இலட்சம் ரூபா பணத்தை ஒதுக்கி உள்ளது.

மேற்படி பணத்தில் புதிய நீர் ஏற்றும் இயந்திரம் ஒன்றை கொழும்பில் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை நீர்வழங்கல், வடிகால் அமைப்பு சபை மேற்கொண்டுள்ளது. விரைவில் மேற்படி இயந்திரம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டதும் மேற்படி திட்டம் அமுல் செய்யப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் நடைபெறும் என வலி. மேற்கு மீளக்குடியமர்வு புனர்வாழ்வு புனரமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் கா.சந்திரராசா தெரிவித்தார். (இ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கையாளர்களுக்கு

# முக்கிய அறிவித்தல்

**நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு**
எமது ஸ்தாபனம் தற்காலிகமாக

**லைடன் புடைவை நிலையம்**
**இல. 27, சுவாட்ஸ் லேன்,**
**சுண்டுக்குளி**

என்னும் இடத்தில் **31-12-96** வரைக்கும் இயங்கும்.

**01 - 01 - 1997** இல் இருந்து எமது ஸ்தாபனம்
**இல. 32, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

என்னும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சுவாட்ஸ் லேன் வரும் பாதை:
★ கண்டி றோட் ஆசீர்வாதம் அச்சகத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கை.
★ ஆச்சிரமத்துக்கு முன்னால் வரும் ஒழுங்கையாலும் வரலாம்.

(சி/3741)


நகரசபை, சாவகச்சேரி.

## வரவு - செலவுத் திட்டம் 1997

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 1997 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டம் இச்சபையில் 18-12-1996 ஆம் திகதி தொடக்கம் ஏழு (7) நாள்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. நடராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 16-12-1996.

(சி/3745)

## 45 ஆம் நாள் அஞ்சலி



**பத்மநாதன் ரட்ணகுமார்**

(தொழில் நுட்பவியலாளர் - ஸ்கைலாக் நிறுவனம்)

மலர்வு: **26—05—1967**
உதிர்வு: **03—11—1996**

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

அன்னாரின் மறைவுத்துயரில் நேரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உயர்ந்த உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் (17-12-1996) இன்று செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

-- மனைவி

இல. 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(44172)

## மரண அறிவித்தல்கள்

### V.S. குணசிங்கம்

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், முன்னாள் கூட்டுறவு ஊழியர், தொழிற்சங்க நிர்வாக உத்தியோகத்தர்)

இல: 03, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த V.S. குணசிங்கம் 16-12-96 அன்று அன்னாரது இல்லத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரை — செல்லம்மாவின் பாசமிகு மகனும், கனகரத்தினம், ராணி, காலஞ்சென்றவர்களான அன்னராசா, வாடாமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், சசிக்கா(ஆசிரியர், யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தி.), சத்தியா (A.M.O, கிளி/ அரசினர் வைத்தியசாலை, அக்கராயன் குளம்), தர்சிக்கா (ஆசிரியர், யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி) சோபிக்கா (எழுதுநர், மருத்துவ பீடம் யாழ்/பல்கலைக்கழகம்), பிரதீபன் (எழுதுநர், சுகாதாரத் திணைக்களம்), பார்த்தீபன் (விஞ்ஞான பீட மாணவன், 4ஆம் வருடம், யாழ்/பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா (ஆசிரியர், யாழ்/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்) அருள் நேசன் (A.M.O, கிளி/ அரசினர் வைத்தியசாலை, அக்கராயன் குளம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிமலன், அபிநயா, சமிந்தியா, அருண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-12-1996) முற்பகல் 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**திருமதி க. குணசிங்கம்**
(மனைவி)
இல:03, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(44166)

### நாகலிங்கம் குலசிங்கம்

(ஓய்வுபெற்ற லிகிதர்)

வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் குலசிங்கம் 12 - 12 - 1996 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் (டாக்டர்) - பொன்னம்மா ஆகியோரின் இளைய மகனும், சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், ரேணுகா (ஆசிரியை, யா/ நாகர்கோயில் ம. வி.), கிருபாகரன் (யாழ்.பல்கலைக்கழக புகுமுக மாணவன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற பரமானந்தம் (டாக்டர்), அழகானந்தம், இராசமணி ஆகியோரின் சகோதரரும், ஆ. நடராசா (டாக்டர்), த. மகேந்திரன் (Supreme Court Registar), த. பாலேந்திரன் (ஆசிரியர்), த.இராசேந்திரம் (கணக்காளர், திருகோணமலை), ந. கமலராணி, அ. ஜெயமலர், ப. இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-12-1996 இல் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
**கு. கிருபாகரன்**
(மகன்)
''கதம்பம்'',
[illegible]

(சி-3739)

### தீவுப் பகுதியில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரைநகர் கடற்படைத் தளபதியுடன் பேச்சு நடத்தினார்.

திருவெம்பாவைக் காலத்தில் காரைநகர், எழுவைதீவு, அனலைதீவுப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் காலை 4 மணிக்கு நீக்கப்படும்.

தற்பொழுது இப் பகுதிகளில் காலை 5 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

### விமானங்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. அந்தப் பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காணும் பொருட்டே அரசு தனது அரசியல் யோசனைகள் சம்பந்தமான சட்டங்களைக் கொண்டு வரவுள்ளது.

வடக்கு — கிழக்கு யுத்தம் பெரும் பணச் செலவில் நடத்தப்படுகின்றது. அவ்வாறு அதனைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்க முடியாது. யுத்தத்துக்கு ஒரு கட்டத்தில் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அந்நிலை விரைவில் வந்தாக வேண்டும் என்பதே அரசின் விருப்பம்.

குறைந்த பெரும்பான்மையுடன் நாம் ஆட்சி நடத்திய போதிலும், அவசர காலச் சட்டத்துக்கு 36 அதிகப்படி வாக்குகளும், வரவு- செலவுத் திட்டத்துக்கு 38 அதிகப்படி வாக்குகளும் கிடைத்துள்ளன.

**அரசமைப்புப் புரட்சி**

நாம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முயற்சி செய்வோம். அது வெற்றியளிக்கவில்லை என்றால் ''அரசமைப்புப் புரட்சி'' ஒன்றை ஏற்படுத்துவோம். மக்களிடம் நேரடியாகச் செல்வோம். பெரும்பான்மையான மக்கள் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவாக உள்ளனர் — என்று சொன்னார். (அ-3-150)

### அரச ஊழியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக' ரட்ணசிறி விக்கிரமநாயக்க அப்பொழுது பதில் அளித்தார்.

கண்டி மாவட்டத்தில் உள்ள 60 பாடசாலைகளில் 16 பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லை. ஓய்வூதிய வசதியை அரசுரத்துச் செய்ய முனைந்துள்ளதால், 24 பாடசாலைகளில் அதிபர்கள் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளனர். இது பெரும் பிரச்சினையை உருவாக்கும் என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலர் ரவூவ் ஹக்கீம் தெரிவித்தார்.

இதற்கிடையில் -44/90ஆம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சேவையில் இருந்து ஓய்வு பெற விருப்பம் தெரிவிப்பதற்கான இறுதித் தினம் இம்மாதம் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

### ஷிரானிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)


தாக்கல் செய்திருந்தனர்.

ஷிரானி பண்டாரநாயக்கா சட்டவிரோதமாக நியமிக்கப்பட்டதால் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று இவர்கள் தமதுமனுக்களில் தெரிவித்திருந்தனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர் மார்க் பெர்னாண்டோ நேற்றுத் தமது தீர்ப்பில் அரசமைப்பின் 107 ஆவது பிரிவுக்கு ஏற்ப ஜனாதிபதி தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பேராசிரியர் ஷிரானி பண்டார நாயக்காவை நியமித்துள்ளார் என்று கூறினார்.


'சித்திரக்கலை'
**9, 10, O/L**
மாணவர்களுக்கானது
- விளக்கப் படங்களுடன் -
ஆக்கம்:
**A.S. சற்குணராஜா**
(யா/ ஹாட்லிக்கல் லூரி)
கிடைக்குமிடம்:
**BOND - யாழ்ப்பாணம்**
(44168)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சிற்றம்பலம் அமரேசன்**

(B. A. Dip - in - Ed.)

(சிரேஷ்ட ஆசிரியர், பகுதித் தலைவர்
யா / செங்குந்த இந்துக் கல்லூரி)

தோற்றம்: **14 — 12 — 1940**
மறைவு: **17 — 11 — 1996**

நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு நிலையான வாழ்வு தேடி நீங்கிச் சென்றீரே நண்பா! உனது நினைவுகள் எங்கள் உயிருள்ள வரை நீங்காது.

உன் பிரிவால் துயருறும்
நண்பர்கள்.

(44171)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org